destinados a burundianos expulsados de Tanzania. Aspectos clave de la Guía eran la restauración del apoyo social para gente sufriendo de estrés agudo, el uso de Primeros Auxilios Psicosociales, y la provisión de asistencia psicosocial a gente padeciendo de trastornos mentales preexistentes.

*Marian Schilperoort y Wella Koyo* describen las experiencias del Alto Comisionado de las Naciones Unidas para los Refugiados en cuanto al uso de la Guía en un campo para refugiados en Etiopía.

*Satyabrata Dash y Lene Christensen* presentan un resumen breve sobre la manera en que la Federación Internacional de Sociedades de la Cruza Roja y de la Media Luna Roja han usado la Guía durante las emergencias recientes en la Asia del Sur, entre otros el ciclón Cidr en Bangladesh.

Un reto importante es la promoción de la accesibilidad de la Guía para grupos comunitarios. Al nivel local la gente a menudo tiene dificultades para leer y comprender la Guía. *Joseph Prewitt Diaz y Anjana Dayal de Prewitt* describen cómo se han usado recursos visuales e imágenes para asistir a grupos comunitarios a trabajar con la Guía en situaciones de post-catástrofe en la América Latina y la Asia del Sureste.

*Kaz de Jong, Clair Mills y Kate* Mackintosh son optimistas con respecto al contenido de la Guía. No obstante, se preocupan de que la implementación de la Guía, dentro del marco de reformas importantes que se llevan a cabo en el sector de asistencia humanitaria, pueda constituir una amenaza a la acción humanitaria independiente.

*Takashi Izutsu y Henia Dakkak* describen cómo el Fondo de Población de las Naciones Unidas (UNFPA) intenta integrar la Guía en la formación de políticas.

En el último artículo *Amanda Melville y Sabine Rakotomalala,* copresidentes del Grupo de Referencia del AISC para Salud Mental y Apoyo Psicosocial en Emergencias Humanitarias y Catástrofes, presentan las actividades que se van desarrollando con el fin de implementar la Guía y analizar las fuerzas y los retos planteados

# Summaries in Tamil

இவ்விசேட இடையீடுகள் வெளியீடு அவசரகால நிலைமைகளில் உளநலம் மற்றும் உளசமூக ஆதரவுக்கான IASCயின் வழிகாட்டல் குறிப்புகளுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றது.

IASC என்பது UN மற்றும் UN சாராத நிறுவனங்களுக்குமான ஒரு மன்றமாகும் (forum). அத்தோடு மனிதநேய உதவிக்கான இணைப்பு நடவடிக்கைகள், கொள்கை விருத்தி மற்றும் தீர்மானம் எடுத்தல் போன்ற விடயங்களுக்கும் IASC மன்றமாகத் தொழில்படுகின்றது. 2007 ம் ஆண்டு IASC அவசரகால நிலைமைகளில் உளநலம் மற்றும் உளசமூக ஆதரவுக்கான வழிகாட்டல் குறிப்புகள் ஆங்கிலம், பிரன்ஷ சு, ஸ்பானிய மற்றும் அரேபிய மொழி ஆகியவற்றில் வெளியிடப்பட்டது (MHPSS).

இந்த வெளியீட்டின் தொடக்க கட்டுரையாக IASCயின் செயற்குழு இணைத்தலைவர்கள் மைக் வெசல்ஸ்உம், மாக் வன் ஒமரன் உம் வழிகாட்டல் குறிப்புகள் ஏன் எவ்வாறு என விபரித்துள்ளார்கள். அவசரகால நிலைமைகளில் MHPSS துறை முகாம்களை மையப்படுத்தியதாகவும் குறிப்பான சில எண்ணக்கருக்களையும், கோட்பாட்டுப் பிளவுகளைக்கொண்டதாகவும் உள்ளது.

வலிமை குன்றிய சான்றுகள் அடிப்படையும் இணக்கப்பாட்டுக் குறைவும் MHPSS நடைமுறைகளை நடைமுறைப்படுத்தலில் எதிர் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அறியப்படுகின்றது. வழிகாட்டல் குறிப்புகள் அவசரகால நிலைமைகளில் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் பற்றி ஒரு ஒரு இணக்கப்பாட்டை 25 நிறுவனங்களுக்கிடையில் ஏற்படுத்தியுள்ளது. பங்குபெறும் நிறுவனங்கள் பகிரப்படக்கூடிய தொலை நோக்கொன்றினை 6 கொள்கைகளின் அடிப்படையில் கொண்டிருக்கின்றது.

1. மனித உரிமைகளையும் சமத்துவத்தையும் மேம்படுத்தல்
2. பாதிக்கப்பட்டவர்களை பங்களிப்புச் செய்யத் தூண்டுதல்
3. ஊறு விளைவிக்காதிருத்தல்
4. பெறக்கூடிய வளங்களையும் ஆளுமைகளையும் கட்டியெழுப்பல்
5. தனியாக இல்லாது ஒன்றிணைந்த ஆதரவழிக்கும் திட்டங்களை விருத்தியாக்கல்
6. பல தரப்பட்ட ஆதரவுத்திட்டங்களை உபயோகித்தல்

அவசரகால நிலைமைகளில் மக்கள் பல்வேறு நிலைமைகளில் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்ட பல்வேறு ஆதரவுகள் தேவைப்படும்.

1. அடிப்படை தேவைகளும் பாதுகாப்பும்
2. சமுதாய மற்றும் குடும்ப ஆதரவுகள்
3. குவியப்படத்தப்பட்ட விசேடத்துவமல்லாத சேவைகள்
4. விசேடமான சேவைகள்

இடையீடுகள் பல்வேறுபட்ட பின்னணிகளில் இருந்து வல்லுனர்களை வழிகாட்டல் குறிப்புகள் பற்றி விமர்சிப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளது. மனித நேய தலையீடுகளில் கலாச்சார மற்றும் உள்ளூர் அனுபவங்களை முன் கொண்டு வந்தமைக்கு ஷரன் அபராமோவிற்ஸ் மற்றும் ஆதர் கெலின்மான் உம் செயற்குழுவை பாராட்டியுள்ளார்கள். துயருறுதல், சமூகத்திருத்தம், என்பவற்றை முழுமையான ஒரு அனுபவமாக இனம் காணுதல் குறிப்பிடம் படியானதொன்றாகும். அவர்களது விமர்சனங்கள் ‘கலாச்சாரம்’ என்னும் சட்டகத்தையும், நிறுவனமயமாக்கப்பட்டுள்ள கலாச்சாரங்கள், மனிதநேய இடையீடுகளின் அதிகார படிமுறை அமைப்புகளையும் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளன.

அவசரகால நிழ்ச்சித் திட்டங்களை உள்ளூர் மக்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்க வேண்டமென அரங்ஷ ா கிராசியா டெல் சோரோ வலியுறுதிதியுள்ளார். இதற்காக நாம் சமுதாயத்திலுள்ள பால் நிலை சார், ஆத்மீகம் சார், கலாச்சாரம் சார் செயற்பாடுகளை கருத்தில் கொள்வதோடு சுமூகமற்ற சூழ்நிலைகளின்போது முகம் கொடுக்கவல்ல மீளியக்கமுள்ள வளங்களை மீளவலியுறுத்துதல் வேண்டும். இலத்தீன் அமரிக்காவில் காணப்படும் ‘சமுக அணிதிரட்டல் ஆதரவு’ திட்ட உதாரணங்களை இவர் எடுத்துக் கூறியுள்ளார்.

ஸ்ரிமோர் லெஸ்ரேயில் முரண்பாட்டுக்கு பிற்பட்ட சூழலின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் டிரெக் ஸ்லோவ் மற்றும் சுசன் ரீன்ஸ்உம் சமுதாயத்தில் கணிசமான ஆற்றல் இழப்பு உளநலக் குறைபாட்டால் ஏற்படுவதை சுட்டிக்காட்டியுள்ளனர். விசேடமான சமூகம் சார் சிகிச்சை சேவை உளநலக்குறைபாடு உள்ளவர்களுக்கு அவர்களது வீட்டுச் சூழலிலேயே வழங்கப்பட்டது. மனவடுவிற்குப்பின்னான மனஅழுத்தத்திற்கான அறிகுறிகள் பரவலாகக் காணப்படுவதோடு, ஆபத்துக்களில் இருந்து சாதாரணமாக தப்பிப் பிழைப்பதை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

வழிகாட்டல் குறிப்புகளை வாசித்தபின் புளோரன்ஸ் பியன்கானா வுக்கு ஒரு

குழப்பமான தெளிவற்ற நிலை ஏற்பட்டள்ளது.

1. யார் திட்டமிடலின் போதும் நடைமுறைப்படத்தலின்போதும் தலைமை வகிக்க வேண்டும்
2. எந்த மட்டத்தில் வழிகாட்டல் குறிப்புகளை உபயோகிப்பது
3. எமக்கு என்ன அத்தாட்சிகள் உள்ளன
4. குறிப்பிட்ட இடையீடுகளுக்கான செலவீனங்கள் என்ன
5. இடையீடுகளில் குறிப்பிட்ட உளநல உளசமூக ஆதரவுக்கான நிலை/இடம் என்ன

சிறீனிவாச மூர்த்தி மத்திய கிழக்கு நாடுகளில் உளநல மற்றும் உளசமூக இடையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படக்கூடிய சில நெருக்கடியான சூழ்நிலைகளை சுட்டிக்காட்டியுள்ளார்

1. தொழில் நிபுணத்துவம் வாய்ந்த தலைமைத்துவம் உள்நாட்டில் இல்லாமை
2. உளநல, உளசமூக நிகழ்ச்சித் திட்டங்களை ஆதரிக்கும் உட்கட்டமைப்பு வசதியின்மை
3. உளநல குறைபாடுகளை சுற்றியுள்ள இழுக்குகள்
4. பலவகையான இடையீட்டு மாதிரிகள்
5. பண உதவியின்மை
6. NGO க்கும் UN நிறுவனங்களுக்குமிடையிலான போட்டியான ஈடுபாடுகள்
7. அரச விருப்பு போதாமையும் அரசியல் ஸ்திரமற்ற நிலையும்சில தடைகளை வழிகாட்டல் குறிப்புகள் குறைக்கின்றது. ஆயினும் மற்றய குறைகளை நன்கு திட்டமிட்ட செயற்பாடுகள் முகம் கொடுக்க வேண்டும்.

டேவிட் பெனடெக்ட் மற்றும் ரொபேட் உர்சானோ வும் வழிகாட்டல் குறிப்புகளை தொழில்ரீதியாக வளம்பெற்ற சமுதாயங்களில் வழிகாட்டல் குறிப்புகளின் பிரயோகம் பற்றி கலத்துரையாடியுள்ளனர். வழிகாட்டல் குறிப்புகளின் முதன்மைக் கொள்கைகளும் அணுகு முறைகளும் நடைமுறைச் சாத்தியமானவை என அமரிக்க நாட்டு அண்மைக்கால அனுபவங்கள் கூறுகின்றன.

பியா ரொக்கோல்ட் மற்றும் லோரா மக்டோனல்ட் உம் முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட நாடுகிளில் உளநலம் மற்றும் உளசமூக நன்னிலை என்பவை நிலைபேறான சமூகப்பொருளாதார அபிவிருத்தியின் உள் மையம் என அவர்கள் வாதிடுகின்றார்கள். அத்தோடு வறுமைக்குறைப்பு, சமாதானம் ஏற்படுத்தலிலும் உளநலம் உளசமூக நன்னிலையின் பங்களிப்பு பிரதானமானது. முரண்பாடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகிய நாடுகளில் செயற்பாடுகளை இணைத்துச் செய்யவும் பலப்படுத்தவும் வழிகாட்டல் குறிப்புகள் ஒரு முன்னெடுப்பு என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

வில்லியம் யூலே வழிகாட்டல் குறிப்புகள் மிகப்பெரிய ஒரு சாதனை எனப் புகழ்ந்துள்ளார். விஞ்ஞான ரீதியான அத்தாட்சிகள் போதுமானளவு இல்லாமையை சுட்டிக் காட்டியுள்ளார். மனவடு மற்றும் மனவடு ரீதியான மன நெருக்கம் ஆகிய எண்ணக்கருக்கள் கருத்தாளமின்றி சாதாரண இடையீடுகளாக கருத்தெடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது பற்றி கவலை தெரிவித்துள்ளார். காலம் தாழ்த்தாத உளசமூக குழு இடையீடுகள் அவசியம் என்பதும் பொதுவான குழந்தை உளக் கோளாறுகளுக்கு விசேட கவனங்கள் தேவை என்பது பற்றியும் கவலை தெரிவித்துள்ளார்.

பாபரா லோபஸ் கார்டோஸோ வழிகாட்டற்குறிப்புகள் தரவுகளை மையப்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்களை இனம் காணவில்லை என அபிப்பிராயப்படுகின்றார். அவசரகால நிலைமைகளில் உளநல, உளசமூக

கணிப்பீடுகள் முக்கியமான தகவல்களை தரும் வகையில் அமைய வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். அத்தாட்ச்சி சார் தகவல்களே மனித நேயப்பணியாளர்கள் வழிகாட்டற் குறிப்புகளை பின்பற்றுவதற்கு நம்பிக்கையளிக்கும் என அவர் அபிப்பிராயப்படுகின்றார்.

கெனத் மில்லர் மற்றும் காயத்திரி பெர்ணாண்டோ வும் அவசரகால நிலைமைகளில் தொற்று நோய்கள் பற்றிய கணிப்பீடுகள் ஏன் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன என விளக்கியுள்ளனர். PTSD போன்றவற்றிற்கு மிகக்குறைந்த கவனம் செலுத்தப்படுகின்றமையும் வேதனையான சூழ்நிழலையில் கலாச்சார வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாமையும் உண்மையான வேதனைச் சூழ்நிலையம் மனக்கோளாறையும் சரியாக இனம் பிரித்துப் பார்க்காமையும் காரணங்கள் ஆகின்றன. ஆயுத முரண்பாட்டுச் சூழலிலும் இயற்கை அனர்த்தங்களின் போதும் பெரிய அளவிலான உளநல, உளசமூக கணிப்பீடுகள் அவசியம் என்பதை பரிந்துரைத்துள்ளனர்.

அலிஸ்ரர் அகர் தொழில் விசேடத்துவம் சார் இணக்கப்பாடுகள் பற்றிக் கூறியுள்ளார். IASC வழிகாட்டல் குறிப்புகளபைப்பொறுத்தளவில்

1. நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பில், நடைமுறைச் சாத்தியமான, உறுதியளிக்கக்கூடிய ஒரு அடைவு
2. பிரதான கொள்கைகளையும் நடைமுறைகளையும் விபரிக்கும் ஒரு அறிவு சார் உள்மையம்
3. பலமானதொரு அத்தாட்சி சார் நடைமுறையை ஏற்படுத்துவதற்கான உபயோகமான ஒரு அடிப்படை.

மார்க் வன் ஒமரனும் மைக் வெசல்ஸ் உம் கருத்துக்களை மறுக்கும் வகையில் அதிகுறைந்த பதிலழிப்பு (minimum response) என்றால் என்ன, அவ்வாறான பதிலழிப்பின் போது எவை முன்னுருமையான செயற்பாடுகளாகலாம் என்பது பற்றி தங்களுடைய பகுதியில் கூடுதலாக பார்க்கிறார்கள்.

இவ்வெளியீட்டின் அடுத்த பகுதி IASC வழிகாட்டல் குறிப்புகளை வேறுபட்ட சூழ்நிலைகளில் நடைமுறைப்படுத்தல் பற்றி நோக்குகின்றது.

G. கிறிஷ்ணகுமார், சு. சிவயோகன் மற்றும் D. சிவயோகன் ஆகியோர் 2004 சுனாமிக்குப்பின் இலங்கையில் யாழ் குடாநாட்டில் எவ்வாறு உளசமூக நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் ஒரு பொறிமுறை இயற்கையாக உருவாகியுள்ளது என்பது பற்றி விபரிக்கிறார்கள். இது தேவை காரணமாக ஏற்பட்டுள்ளது. பிரதேச மட்ட சுகாதார சேவைகளின் பணிப்பாளரதும் மாவட்ட மட்ட மனநோய் வைத்தியரதும் வழிகாட்டலின் பேரில் மாவட்ட உளசமூக மன்று உளசமூக நடவடிக்கைகளை இணைக்கும் பங்கை ஏற்றது. சிவில் யுத்தம் காரணமாக எழுந்த அவசர உளசமூக தேவைகளுக்கு மன்று பதிலளித்தது.

2007 ஆகஸ்ட் மாதம் பெருவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட தேவைகளுக்கு எவ்வாறு IASC வழிகாட்டல் குறிப்புகள் பிரயோகப்படுத்தப்பட்டது என்பது பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். ஒவ்வொரு படியில் பெறக்கூடிய நுட்பங்களையும் பிரதான செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். பல்மட்ட அணுகுமுறை ஒன்றை முன்மொழிந்துள்ளார்கள். இது முடிவெடுப்பவர்கள் மற்றும் களமட்ட தலைவர்கள், சமூகநிறுவனங்களுடன் பயிற்சி, பரிந்துரைப்பு மற்றும் sensitization என்பவற்றை இணைத்ததான முறையாக இருக்கும்.

கரொலின் எஜ்வெரியும்யும் ஜோர்ஜ் கஸ்ரிலாவும் IASC வழிகாட்டற்குறிப்புகளை கொலம்பியாவில் நடைமுறைப்படுத்தலில்

ஈடுபட்டிருந்தனர். பொதுவாக குறிப்புகள் பிரயோகமானதாகவும் பொருத்தமானதாகவும் வெவ்வேறு சமுதாயங்களில் பங்காளிகள் தேவைகளை முன்னுருமைப்படுத்தக்கூடிய தாகவும் பொருத்தமான செயற்பாடுகளை திட்டமிடவும் உதவியது எனக் கூறியுள்ளார்கள்.

இரண்டு சுருக்கமான சம்பவக்கற்கைகளில் ரெபேக்கா கோனும் அலிசன் ஸ்ராங்கும் எவ்வாறு வழிகாட்டற் குறிப்புகள் யோடானிலும் கென்யாவிலும் பரவியது என விபரிக்கிறார்கள். அவர்கள் 'மேலதிக பெறுமதி' (added value) பற்றியும் முழுமையாக நடைமுறைப்படுத்தலை தடுத்த காரணிகள் பற்றியும் கலந்துரையாடுகிறார்கள். வென்டி வியற்றன், பிரான்ஸ்சிஸ் அலுமாய், கிரேஸ் ஒன்யன்கோ ஆகியோர் ஆபிரிக்காவில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து ஒரு பயிற்சியாளரை பயிற்றுவிக்கும் பயிற்சியை தந்துள்ளார்கள். இது அவசரகால நிலைமைகளில் உளசமூக பணிகளை ஆற்றக்கூடிய வள ஆளணியினை தந்துள்ளதோடு வெளிக்களத்தில் வழிகாட்டற் குறிப்புகளை பிரயோகிக்கும் ஒரு மன்றையும் உருவாக்கியுள்ளது.

மரியன் ஷில்ப்ரூட் மற்றும் வெல்லா குயோ ஆகியோர் எத்தியோப்பாவில் அகதிகள் முகாம்களில் UNHCR வழிகாட்டற் குறிப்புகளை உபயோகித்துக் கிடைத்த அனுபவங்களை விபரிக்கிறார்கள்.

சத்தியப்பிரடா டஷ் மற்றும் லெனி கிரிஸ்டென்சன் தெற்காசியாவில் குறிப்பாக பங்களாதேஷில் ஏற்பட்ட சூறாவளியின்போது எவ்வாறு வழிகாட்டற் குறிப்புகள் ICRCயாலும் ரெட் கிரசென்ற் அமைப்புகளாலும் உபயோகித்தன என்பது பற்றிய மேற்கண்ணோட்டம் ஒன்றைத் தருகிறார்கள்.

வழிகாட்டற் குறிப்புகளை சமுதாயக் குழுக்கள் அடையச்செய்வது பெரிய சவாலாக உள்ளது. அவர்கள் வழிகாட்டற் குறிப்புகளை வாசித்து விளங்கிக்கொள்ளக் கஷ்டப்படுகிறார்கள். லத்தீன் அமரிக்கா, தென்கிழக்காசியா போன்ற இடங்களில் பேரழிவுகளுக்கு பிற்பட்ட சூழலில் எவ்வாறு வழிகாட்டற் குறிப்புகள் கட்புல சாதனங்கள், படங்கள் போன்றவற்றின் உதவியுடன் எவ்வாறு விளங்கவைக்கப்பட்டது என பிரிவிட் டயஸ்உம் அஞ்சனா டயாலும் விளக்குகிறார்கள்.

கஸ் டி யொன்க் , கிளயார் மில்ஸ் மற்றும் கேட் மக்கின்ரொஷ் உம் வழிகாட்டற் குறிப்புகள் பற்றி நேரான

அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் மனித நேயப் பணித்துறையின் பாரிய சீர்திருத்தங்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தலானது, சுயமான மனிதநேயச் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாகலாம் என துக்கப்படுகிறார்கள்.

டகாஷி இசுற்சூ மற்றும் கெனியா டகக் உம் UNFPA வழிகாட்டற் குறிப்புகளை கொள்கை ஆக்கத்துடன் ஒன்றிணைப்பதற்கு முயற்சிப்பது பற்றி கூறியுள்ளார்கள்.

இறுதி கட்டுரையாக்கத்தில் IASC யின் MHPSS இன் தற்போதைய பரிந்துரைப்புக் குழு இணைத்தலைவர்கள் அமன்மா மெல்விலேயும் சபீனா ரகோட்டோ மலாலாவும் வழிகாட்டற் குறிப்புகளின் நடைமுறைப்படுத்தல் மற்றும் இந்த நடைமுறைப்படுத்தல் உத்திகளின் பலங்கள் மற்றும் சவால்கள் பற்றி ஆராய்வதற்குமாக தற்பொழுது இருக்கும் செயற்திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.